பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 31 திங்கட்கிழமை 15.07.2024 கதிர் 250

## தேர்தலை பிற்போட்டுவிட ஆளும்தரப்பு சதி முயற்சி

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

தேர்தலைப் பிற்போடவே ஆளும் தரப்புச் சதி செய்கிறது என தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில்நேற்று இடம்பெற்றதமிழ்அரசுக் கட்சியின் வழக்குத் தொடர்பான கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலைநிறுத்தக்கோரி சட்டத்தரணிஒருவர்உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யதுள்ளார். அதுமூன்றுநீதியரசர்கள் முன்பாகவிசாரணைக்கு வருகிறது. ஏற்கனவே கடந்த திங்கள் கிழமையும் அப்படியான மனு விசாரணைக்கு எடுக்கப் பட்டது. 5 நீதியரசர்கள் குழு முன்னிலையில் இது நடந்தது. அந்த வழக்கில் நானும் முற்பட்டிருந்தேன். அது அடிப்படையில்லாத மனு என்ன தெரிவித்து அதனைத் தாக்கல் செய்தவருக்குஒரு இலட்சம் ரூபாய் ☞ 2

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான

## சு.க. கூட்டணியின் முடிவு இன்னும் இரு வாரங்களில்

சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியை இன்னும் இரண்டு வாரங்களில் பலப்படுத்தி ஜனாதிபதித் தேர்தல் குறித்த எமது தீர்மானத்தை அறிவிப்போம் என்று கல்வி அமைச்சர்சுசில்பிரேமஜயந்த தெரிவித்தார்.

பதுளை நகரில் நேற்று இடம்பெற்ற புதிய கூட்டணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனைத்தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

தவறான அரசியல் தீர்மானங்களினால்பலவீனமடைந்திருந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் உயிர் பெற்றுள்ளது. பாரம்பரியமான சுதந்திரக் கட்சியின் மீது பெரும்பாலான மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஆகவே இந்தப் புதிய கூட்டணியின் இரண்டாவது மாநாட்டின் ஊடாக சகல சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். அனைவரும் புதிய கூட்டணியில் ஒன்றிணையவேண்டும்.

அரசியல் நெருக்கடிகளினால் நாட்டில் மீண்டும் உறுதியற்ற ஆளும்தரப்புத் தோற்றம் பெறக்கூடாது என்பதைக்கருத்திற்கொண்டே சிரேஷ்டஅரசியல்வாதிகளை உள்ளடக்கிய வகையில் பலமான அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். இன்னும் இரண்டு வாரங்களில்கூட்டணியைப் பலப்படுத்தி ஜனாதிபதித் தேர்தல் குறித்து எமது ☞ 8

## இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் உடனடியாக மாகாண சபைத் தேர்தலைவைப்பதற்குஏற்றவிதத்தில் சட்டத் திருத்தங்களை இப்போதே செய்து வைத்துவிடலாமா என்பது ஜனாதிபதி ஆராய்கிறார் என்று தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தலில் தான் மீண்டும் வெற்றிபெற்றால் உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்கிற யோசனை அவரிடம் காணப்படுகின்றது என்பதால் இந்த முன்னேற்பாடு தொடர்பில் அவர் சில நகர்வுகளை மேற்கொள்ளப் பார்க்கின்றார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத் தடைகளை நீக்குவது தொடர்பில் நாடாளுமன் உறுப்பினர் சுமந்திரனுடன் அவர் தொலைபேசியில் பேசியிருக்கிறார். இது தொடர்பில் இதற்கு முன்னரும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களானசுமந்திரன்மற்றும் சாணக்கியனுடன்நாடாளுமன்றத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து உரையாடியிருந்தார். மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு மத்தியால் மீண்டும் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் ☞ 2

# வீட்டுச் சின்னம் முடக்கப்படவில்லை அது எந்தத் தேர்தலையும் சந்திக்கும்

### தமிழ் அரசுக் கட்சி தெளிவுபடுத்தல்

தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சிச்சின்னத்தின்கீழ்எந்தவொரு தேர்தலையும் நாம் சந்திக்க முடியும். அதற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் கிடையாது. இது தெரிந்தும் சிலர் வேண்டுமென்றே பொய் சொல்கிறார்கள் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கட்சியின் வழக்குத் தொடர்பாக வவுனியாவில் ☞ 2

## தீகவாபி தூபிக்குள் புனித தாதுக்கள் வைக்கப்பட்டன

வரலாற்றுச் சிறப்புமிக்க தீகவாபி தூபிக்குள் புனித தாது, பொக்கிஷங்கள் என்பவற்றை வைக்கும் நிகழ்வு இன்று (14) காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இலங்கையின் நான்காவது பெரிய தூபிகளில் ஒன்றான தீகவாபியை புனரமைக்கும் பணிகள் 2020 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்திற்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் தீகவாபி தூபியில்புனிததாதுவைக்கப்பட்டதோடு அந்த சமயத்தில் விமானப் படையினர் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தினர்.

புனித தாது மற்றும் ஏனைய தாதுக்கள் வைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது ☞ 9

## தேர்தல் நாள் தெரிந்ததும் வேட்பாளரை அறிவிப்போம்

### நாமல் ராஜபக்ச திட்டவட்டம்

தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்டதும் எமது வேட்பாளரை அறிவிப்போம் என்று பொதுஜனபெரமுனவின் தேசியஅமைப்பாளரும், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானநாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

திவுலுப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கோண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலை ☞ 8

## இரண்டு சக்திகளும் என்னோடு இணைக

### ஜனாதிபதி ரணில் அழைப்பு

ஐக்கிய மக்கள் சக்தியையும், தேசிய மக்கள் சக்தியையும் தன்னுடன் இணைந்துகொள்ளுமாறுமீண்டும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கண்டியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அமேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்;டை நேசித்ததன்பின்னரேயே எமது கட்சியை நேசிக்க வேண்டும். நாம் அதனையேசெய்கின்றோம். அதிகாரத்தினை வழங்குகின்றபோது அதனைபொறுப்புஏற்றுக் கொள்ள வேண்டும். நாட்டைப் பாதுகாக்க வேண்டும். ☞ 9

## தேர்தலுக்குப் பயந்தபடி பதவியில் நீடிக்க விரும்பும் ஒருவரை என் வாழ்க்கையிலேயே பார்த்ததில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம்

தேர்தலுக்குப்பயந்து தேர்தலை நடத்தாமல் பதவியில், அதிகாரத்தில் தொடர்வதற்காகபல்வேறு உத்திகளைக்கையாளும் ஒருவரை நான் எனது வாழ்க்கையில் பார்த்தில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் விசனம் தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற மக்கள்அரண்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிகோமாளித் தனம் காட்டி வருகிறார். புண்ணியத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டு ஜனாதிப ☞ 2

## பெரமுனவின் ஆதரவு இன்றி எவரும் வெற்றிபெற முடியாது

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

பொது ஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் எந்த அரசியல் கட்சியாலும் தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் நன்றி கடன்பட்டுள்ளார்கள். ஆகவே, மக்கள் அரசியலில் சிறந்த தீர்மானத்தை ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலுக்காக ரூ. 10 பில்லியன் ஒதுக்கீடு

ஜனாதிபதிதேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் செலவினங்களுக்காக தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியை விடுவிக்க இயலுமெனநிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, ஜூலை 17 தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ☞ 2

## சஜித்தின் பாதுகாப்பை அதிகரிக்குக! எரான் விக்கிரமரட்ண வலியுறுத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சிதலைவருமான சஜித் பிரேமதாசவின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றஉறுப்பினர் எரான் விக்கிரமரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

டொனால்ட் டிரம்ப் மீதானதாக்குதல்குறித்து கருத்து தெரிவித்துள்ள எரான் விக்கிரமரட்ண எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்பு குறித்து சந்தேகங்கள் உள்ளன. சில ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

திருப்பிவழங்குவது, 13இல்கூறப்பட்ட அதிகாரங்களை அரசமைப்புத் திருத்தங்கள் ஏதுமின்றி மீண்டும் மக்களிடமே வழங்குவது என்பன குறித்தும் அந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சுமந்திரனைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜனாதிபதி, மாகாண சபைத் தேர்தலை நடத்தும் வகையில் அடுத்துவரும் மாதங்களில் மேற்கொள்ளவேண்டிய சட்டத் திருத்தம் தொடர்பாக மேலும் பேசி உள்ளார். மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறையில் நடத்தும் வகையில் சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணை ஒன்று ஏற்கனவே தயார் நிலையில் உள்ளது. அந்தப் பிரேரணை அரசிதழில் வெளியிடப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் முன்னால் சவாலுக்குட்படுத்தப்பட்டு, நீதிமன்றத்தின் அவதானிப்புக்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டும் உள்ளன. எனினும் பின்னர் அதனை நிறைவேற்றாமல் ஆளும் தரப்பினர் கிடப்பில் போட்டுவிட்டனர். மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் மத்தியின் அதிகாரத்தின் கிழேயே மாகாண சபைகளை வைத்துக்கொள்ளும் நோக்கத்தில் அவர்கள் இருந்ததால் சுமந்திரனின் பிரேரணைக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. ஆனால், இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதானால் இலகுவான வழி அந்தப் பிரேரணையைத் தூசு தட்டி எடுத்து நிறைவேற்றிவிடுவதுதான். எனவேதான் அது பற்றி ஜனாதிபதி இப்போது சுமந்திரனுடன் வலிய வலியப் பேசுகின்றார்.

அதுமட்டுமல்ல மாகாண சபைத் தேர்தலை நடத்தப் போகின்றேன், மாகாண சபைக்கான அதிகாரங்களைத் தரப் போகின்றேன் என்கிற வகையில் போக்குக் காட்டினால், குதிரைக்கு முன்பாகக் கரட்டைக் கட்டியது போன்று தமிழ் மக்கள் முன்பாக மாகாண சபை அதிகாரங்களைக் கட்டி வைத்துவிட்டால் அடுத்த -ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவைத் தான் பெறலாம் என்றும் ரணில் கணக்குப் போடுகின்றார். அதனால் அவர் இப்போது சுமந்திரனைச் சுற்றிச் சுற்றி வருகின்றார்.

மாகாணசபை 'கரட்'டை முன்னால் கட்டவிட்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் குதிரைகளின் ஆதரவுடன் வென்றுவிடலாம் என்கிற ரணிலின் ஆசை ஈடேறும் அளவிற்குத் தமிழர்கள் இளிச்சவாயர்களா என்ன....? நீங்களே சொல்லுங்கள் வாசகர்களே!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வீட்டுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடி ஆராய்ந்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, ரெலோ கட்சியின் செயலாளர் கோவிந்தன் கருணாகரம் தமிழ் அரசுக் கட்சியின் சின்னம் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களை மறுதலிக்கும் விதத்தில் உண்மையைத் தெளிவுபடுத்தினார்.

ரெலோ அமைப்பின் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மட்டக்களப்பில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும் போது தமிழ் அரசுக் கட்சியின் சின்னம் நீதிமன்றத்தில் இருக்கிறது, தேர்தலின்போது அது வெளியே வருமே என்று தெரியாது என்று சொன்னார்.

அந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் ஒரு செய்தியாளர், தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டமைப்பாக வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றார்கள். எதிர்காலத்தில் அது சாத்தியமா என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடவேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகள், தமிழ்த் தேசியத்தை விரும்புகின்ற கட்சிகள் என்று எல்லோரும் ஒருமித்துக் கேட்கவேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடு. ஆனால், நீங்கள் கேட்ட கேள்வி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவீர்களா என்பது, வீட்டுச் சின்னம் இப்போது எங்கிருக்கின்றது என்று உங்களுக்கே தெரியும். நீதிமன்றத்தில் இருக்கின்றது. இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியினரே தங்களுக்குள் அடிபட்டு அதனை நீதிமன்றத்தில் வைத்திருக்கிறார்கள். அடுத்த தேர்தலில் வீட்டுச் சின்னம் வெளியில் வருமோ என்பதே சந்தேகம். (இதைச் சொல்லும்போது அவரது முகத்தில் ஒரு நக்கல், நையாண்டிச் சிரிப்பு கொட்டுகின்றது) எனவே தேர்தல் வரும்போது அது பற்றி நாம் முடிவெடுப்போம்" என்கிறார்.

அவரது கருத்துக்கான பதில் என்று நேரடியாகக் குறிப்பிட்டு சுமந்திரன் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றாலும், சிலர் வேண்டும் என்றே பொய்யான பரப்புரைகளைச் செய்கிறார் என்று சாடினார்.

கட்சியின் வழக்கு மற்றும் தேர்தல் சின்னம் தொடர்பாக சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி தொடர்பான வழக்கு அடுத்த தவணைக்காக ஜூலை 19 வரவிருக்கின்ற காரணத்தினால் அது குறித்து உரையாடப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களது நிலைப்பாட்டுக்கு அமைய மறுமொழிகளை தாக்கல் செய்தபிறகு வழக்கை முடிவுறுத்துவதற்கான ஒரு யோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அந்தயோசனையின் விரங்கள் நாங்கள் மத்திய செயற்குழுவில் கூடித் தீர்மானிப்போம். ஆனால் பொதுவாக வழக்கை எந்த அடிப்படையில் முடிவுறுத்தலாம் என இந்தச் சந்திப்பில் இணங்கப்பட்டிருக்கிறது. கலந்துரையாடல் முன்னேற்றகரமாக இடம்பெற்றது. 8 எதிராளிகளையும் 19 ஆம் திகதி வழக்கில் அழைப்பார்கள். கடைசியாக இடையீட்டு மனுவை முன்வைத்த ஜீவராஜா என்பவருடைய இடையீட்டு மனு தொடர்பான விடயமும் 19 ஆம் திகதி இருக்கிறது. அதனால் வழக்கு தள்ளிப் போகக்கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

இப்பொழுது குடியியல் நடவடிக்கைகள் சட்ட மூலத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின்படி வழக்கு விளக்கத்திற்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிபதியோடு ஒரு கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. அந்த இடத்தில்தான் வழக்கைச் சுமுகமாகத் தீர்க்கக்கூடிய வழிகள் என்ன என்பதை நீதிபதியோடு இணைந்து பேசுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். ஜூலை 19 மறுமொழி வழங்கிய பின்னர் ஒரு திகதியைத் தீர்மானித்து கலந்துரையாடலை மேற்கொண்டு வழக்கை என்ன மாதிரி முடிவுறுத்தலாம் என்ற தீர்மானத்திற்கு வரலாம். அதற்கு முன்னர் மத்திய செயற்குழு கூடி எடுக்கப் போகும் தீர்மானம் தொடர்பாகக் கலந்துரையாடி கட்சியின் இணக்கப்பாட்டைத் தெரிவிக்கும்.

அத்தோடு, வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதன் காரணத்தினால் தமிழ் அரசுக் கட்சி செயற்பட முடியாமல் இருகிறது, நீதிமன்றத்தில் முடங்கிக் கிடக்கிறது, கட்சியினுடைய சின்னத்தை பாவிக்க முடியாமல் இருக்கிறது, தேர்தல் வந்தால் என்ன செய்வார்கள், என்றெல்லாம் பலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள். இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

இதனை ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்துமாறு கட்சியின் தலைவர்கள் என்னைப் பணித்தும் இருக்கிறார்கள். கட்சி முடக்கப்படவில்லை. கட்சியினுடைய செயற்பாடுகள் எதுவும் முடங்கவில்லை. கட்சியின் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சி முழுமையாகச் செயற்பட்டுக்கொண்டே இருகிறது. கட்சியின் சின்னத்தின் கீழ் எந்தத் தேர்தலையும் நாம் சந்திக்க முடியும். அதற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் கிடையாது. ஆகவே இதைத் தெரிந்துகொண்டே சிலர் வேண்டும் என்று பரப்புரை மேற்கொள்கிறார்கள். அதனால்தான் இந்தத் தெளிவுபடுத்தலைச் செய்கின்றோம்.

வழக்கில் நிறுத்தப்பட்டிருப்பது கட்சியின் தெரிவுகள். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெரிவுகளை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனுடைய பிரதிபலன் என்னவென்றால் அதற்கு முன்னிருந்த தலைவர், செயலாளர், நிர்வாகிகள் கட்சியினுடையய செயற்பாட்டை முன்னெடுக்கமுடியும் என்பதுதான். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உயிர்போடு இருப்பதுடன் ஒரு ஆக்கபூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கிறது. எதிர்வரும் எந்தத் தேர்தலிலும் கட்சி போட்டியிடும். மக்களுக்கானதனது செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவில்லை. அது தொடர்பில் எமது கட்சியின் அரசியல் குழு இணைய வழி ஊடாக ஒரு தடவை கலந்துரையாடியது. மத்திய செயற்குழுவில் அது சம்மந்தமான தீர்மானத்தை எடுப்போம் - என்றார்.

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குச் செலவும் செலுத்தும் படி உத்தரவிடப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ளபோது அதனைப் பற்றி பேசக்கூடாது.

ஆளும் தரப்பு தேர்தலை பிற்போட முனைப்புக் காட்டுகிறது. அரசமைப்பில் 83 ட என்கின்ற உறுப்புரையை மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி கொடுத்ததில் இருந்தே அது தெரிகிறது. அதைப் பற்றி விளக்கமாகவும், விவரமாகவும் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன்.

தேவையில்லாத ஒரு திருத்தத்தை வேண்டுமென்றே கொண்டு வந்து மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி தேர்தலை பிற்போடுவதற்கான ஒரு சதி செய்யப்படுகிறது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்திகள் தேர்தலை தாமதப்படுத்த முயல்வதால் எதிர்க்கட்சி தலைவரின் பாதுகாப்பு குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கான முயற்சி ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல். அரசியல்வாதிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்கவேண்டும் இலங்கையிலும் தங்களின் நிகழ்ச்சி நிரலை பூர்த்தி செய்ய முடியாதபோது சில கட்சிகள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றன

அவை கடந்த காலங்களில் வேட்பாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. டிரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு குறித்த செய்தியை அறிந்ததும், நான் சஜித் பிரேமதாசவின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தவேண்டும் என ஆளும் தரப்பிடம் தெளிவாக தெரிவித்துள்ளேன்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயக நாடு பொது மக்களின் ஆணை மற்றும் தேர்தல்கள் மூலம் அரசியலை முன்னெடுக்கின்றது இதன் காரணமாகவே நான் அரசாங்கத்திடம் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன். சஜித் பிரேமதாசவின் பாதுகாப்பு குறித்து எந்த சந்தேகங்களும் காணப்படக்கூடாது என்றார்.

## தேர்தலுக்குப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியான ஒருவர், தேர்தலுக்குப் பயந்து தேர்தலை நடத்தாமல் அதிகாரத்தில் இருந்து கொள்வதற்கு பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறார். இவ்வாறான ஒருவரை நான் எனது வாழ்க்கையில் பார்த்தில்லை. போட வேண்டிய ஒவ்வொரு முடிச்சுக்களையும் போடுகிறார். சிறப்புரிமைகளை வைத்து பயனடைய நினைக்கிறார். சலுகைகள், வரப்பிரசாதங்களை வழங்கிக் கட்சித் தலைவர்களை வளைத்துப் போடும் வேலையிலும் இறங்கியிருக்கிறார். கட்சித் தலைவர்களிடம் பிச்சையெடுத்து பிழைக்கும் நடவடிக்களையும் முன்னெடுத்துள்ளனர்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் வாதிகள் சலுகைகளை அடிப்படையாகக்கொண்டு தமது கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் வெட்கமற்ற, கீழ்த்தரமான, கேவலமான அரசியல் கலாசாரத்துக்கும், அவ்வாறான அரசியலை முன்னெடுப்பவர்களையும் இந்த பேராசை அரசியலையும் முடிவுக்குக் கொண்டு வரும் காலம் நெருங்கி விட்டது

ஜனாதிபதியும் ஆளும்தரப்பினரும் தேர்தலைக் கண்டு அஞ்சமடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி பூச்சியத்துக்கு வீழ்ந்ததுடன், புண்ணியத்தால் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதற்குக் கூடப் பல மாதங்கள் பிடித்தன.

மூலோபாய ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் இருப்பை பாதுகாக்கும் விதமாகவே இவ்வளவு காலமும் செயல்பட்டு வந்துள்ளனர். இத்தகைய சுயநல போக்குகளை விடுத்து, மக்களின் யுகத்தை உருவாக்கி, சாரதாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் ஆளும் தரப்பொன்றே தற்போது நாட்டுக்கு அவசியம்.

பொய், மோசடி, நட்புவட்டார அரசியலை தொடராமல், கிராமத்தையும், நகரத்தையும், நாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கும், பொது மக்களை பலப்படுத்துவதற்கும் மக்கள் ஆணையை எனக்குப் பெற்றுத்தாருங்கள். ஜனாதிபதி அவர்கள் தேர்தலுக்கு அச்சப்பட்டால் கொழும்பு 7 இல் அவரது மாளிகைக்குச் சென்று, சுடு தண்ணீரில் நன்றாகக் குளித்துவிட்டு நெட்பிளிக்ஸ் வலையில் திரைப்படம் பார்த்துக்கொண்டிருக்க முடியும். இல்லாவிட்டால் எம்முடன் தேர்தலுக்கு வாருங்கள். ஐக்கிய மக்கள் சக்திஎந்தவொரு தேர்தலுக்கும் எந்தவொரு சவாலுக்கும் தயாராக இருக்கிறது.

அரசமைப்பு சதிகள் ஊடாக நீதிமன்றத்தில் மீண்டும் மீண்டும் தமது அடியாட்களைப் பயன்படுத்திப் படியேறி, தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள்.

நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டமோ, பொருளாதாரக் கொள்கையோ, பொருளாதாரக் குழுவோ இல்லாத இவர்கள், உலக செல்வந்தர்களுக்கு சேறுபூசும் விதமாகப் பேசி, முதலீட்டாளர்களைப் பயமுறுத்தி, கப்பம் கேட்டு வருகின்றனர். ஆட்சியில் பங்காளர்கள் இல்லாதது போலப் பேசினாலும் விவசாயம், கலாசாரம், கடற்றொழில் போன்ற பல அமைச்சுக்களைக் குறித்த தரப்பினர் வகித்துள்ளனர். இவர்கள் நாட்டை அழித்த பயங்கரவாதிகள். 71, 88, மற்றும் 89 களில் இந்த நாட்டை அழித்து, பாடசாலைகளை தீயிட்டு எரித்து நாட்டையே பீதியால் ஆண்டனர்.

இவர்களின் புதிய திட்டம் கிராமத்திற்கு நீதிமன்ற அதிகாரங்களை வழங்குவதாகும். 88 மற்றும் 89 ஆம் ஆண்டுகளில் நீதித்துறை அதிகாரங்களை கிராமத்து மக்களுக்கு வழங்கப்பட்டதால் பல உயிர்கள் பலியாகின.

இந்த கொலைகார பயங்கரவாதிகள் மீண்டும் நாட்டுக்கு தேவையில்லை ராஜபக்சர்களை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு வீடு வீடாகச் சென்று அடிமட்ட பிரச்சார நடவடிக்களை முன்னெடுத்தது இத்தரப்பினரே. ராஜபக்சக்களை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு 'டீல்' போட்டு வீடு வீடாகச் சென்று சுவரொட்டிகளை ஒட்டினர். இவர்களைப்போன்று திருடர்களுடன் எனக்கு எந்த 'டீலும்' இல்லை. மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வர கிராமத்தில் வீடு வீடாகச் சென்று வாக்குத் திரட்டும் திட்டத்தைக் இந்த மக்கள் விடுதலை முன்னனணியினரே முன்னெடுத்தனர். நாட்டை அழித்த திருடர்களை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக மக்கள் விடுதலை முன்னனணியினர் செயற்பட்டாலும், அந்த திருடர்களுடன் இணைந்து பதவிகளை ஏற்றுக் கொள்ள நான் ஒருபோதும் விரும்பவில்லை - என்றார்.

இக்கூட்டத்தில் வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல, மேல் மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் சுமித் லால் மெண்டிஸ் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் அனில்குமாரவிஜேசிங்க ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டனர்.

## ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிசாளர் ரத்நாயக்கவின் அறிவுறுத்தலுக்கமைய இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான நிதியை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## பெரமுனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்க வேண்டும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

திவுலபிடிய பகுதியில் நேற்று இடம்பெற்ற ஶ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருடகாலப் போரை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்சக்கள் நாட்டுக்கு எதிராக ஒருபோதும் செயற்படவில்லை. 2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் எடுத்த தவறான தீர்மானத்தை 2019ஆம் ஆண்டு திருத்திக்கொண்டார்கள்.

பூகோள மட்டத்தில் பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பில் ஏற்பட்ட தாக்கத்தை நாடு என்ற ரீதியிலும் நாமும் எதிர்கொண்டோம். கொவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கு மத்தியில் நாட்டை மூடினால் பொருளாதார நெருக்கடி தீவிரமடையும் என பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டார்கள்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்காவிடின் நாட்டு மக்கள் உயிரிழப்பார்கள் என்று வைத்திய நிபுணர்கள் குறிப்பிட்டார்கள். பொருளாதாரமா, மக்களின் உயிரா என்ற நிலையில் கோட்டாபய ராஜபக்ச நாட்டு மக்களின் சுகாதார ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு தீர்மானம் எடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களை போரில் இருந்து பாதுகாத்தார். கோட்டபய ராஜபக்ச கொவிட் பெருந்தொற்றில் இருந்து மக்களை பாதுகாத்தார். இதனை எவராலும் மறுக்கமுடியாது. பொருளாதார நெருக்கடியை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள்.

திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் தோற்றுவிக்கப் பட்டன. ஆளும் தரப்பைப் பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தபோது எவரும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி வேட்பாளர்களுடன் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஒப்பந்தமாக கைச்சாத்திடுவோம்

## ஸ்ரீ ல.மு.கா. பிரதித்தலைவர் ஹரீஸ்

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகத்தின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும், நாடாளுமன்ற ஆட்சியைத் தீர்மானிக்கும் பலமாக இருக்கும் போது ஆறு பேர்ச் நிலத்தின் காணி உறுதியை பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராக போராட திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது. தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் பிரதேசங்களில் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும். தமிழ் சகோதரர்கள் பிரதேச செயலாளர்களாக இருந்தால் முஸ்லிம் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். அதுபோல முஸ்லிம் சகோதரர் ஒருவர் பிரதேச செயலாளராக இருந்தால் தமிழ் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். இன்னும் கதைத்து கதைத்து காலத்தை கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்க வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். மக்களினுடைய உரிமை சார்ந்த விஷயங்களில் நாங்கள் எப்போதும் கரிசனையுடனையே தான் இருக்கிறோம் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் டி-100 திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் நாவிதன்வெளி அமீரலி விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

எங்கள் மண்ணின் வளங்களைப் பயன்படுத்தி எத்தனை தொழிற்பேட்டைகளை உருவாக்கப் போகிறீர்கள் என ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கேட்போம். அவர்களை ஆதரிக்க முன்னர் அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகள் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கப்போகிறீர்கள் என்று கேட்போம். எங்களின் மூதாதையர்கள், தாய் தந்தைகள் தந்த நிலங்களுக்கு உரிமை கேட்க பிரதேச செயலகங்களில் பிச்சை பாத்திரம் சுமக்கும் சமுகமாக நாம் இருக்க முடியாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒருவர் அமைச்சராகவும், நால்வர் பிரதி அமைச்சராகவும்



உருவாகும் இயக்கமல்ல. எங்களின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும், நாடாளுமன்ற ஆட்சியைக் தீர்மானிக்கும் பலமாக இருக்கும் போது ஆறு பேர்ச் நிலத்தின் உறுதியை பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராக போராட திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போராளிகளோ, முஸ்லிம் சமூகத்தினரோ தளர்ந்து விடக்கூடாது. தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் எமது பிரதேசங்களின் செயலாளர்கள், உதவி செயலாளர்களில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும். தமிழ் சகோதர்கள் பிரதேச செயலாளர்களாக இருந்தால் முஸ்லிம் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். அதுபோல முஸ்லிம் சகோதரர் ஒருவர் பிரதேச செயலாளராக இருந்தால் தமிழ் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும் எனும் நிலை உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும். இன்னும் கதைத்து கதைத்து காலத்தை கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்கவேண்டிய நேரத்தில் இருக்கிறோம். நாவிதன்வெளி மக்களினுடைய உரிமை சார்ந்த விடயங்களில் நாங்கள் கரிசனையுடனையே தான் இருக்கிறோம்.

இன்னும் நம்முடைய மண்ணில் நாம் உரிமைகளை வென்றவர்களாக கௌரவத்துடன் வாழ வேண்டிய கட்டத்திற்கு வரவில்லை. தேர்தலொன்றை எதிர் நோக்கி இருக்கும் நாம் இருக்கின்ற மூன்று மாத கால அவகாசத்தில் மட்டுமல்லாது ஜனாதிபதி தேர்தலுக்கு பின்பு வருகின்ற காலத்திலும் தனிமனித கௌரவம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையை உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு எங்களுடைய ஆதரவை வழங்குவதாக இருந்தால் எமது பிரதேசங்களின் பிரச்சினைகள், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை பற்றி எழுத்துமூல ஒப்பந்தமொன்றை செய்யவேண்டும். அதில் நாவிதன்வெளி பிரதேச பிரச்சினைகள், காணி உரிமைகள், கல்முனை மாநகர மக்களின் பிரச்சனைகள், அம்பாறை மாவட்ட முஸ்லிங்களின் பிரச்சினைகள், கிழக்கு முஸ்லிங்களின் பிரச்சினைகள், தேசிய ரீதியாக முஸ்லிம்கள் எதிநோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஒப்பந்தம் பண்ணுவது காலத்தின் தேவையாக உள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் நடந்த போதும் சரி, ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு நடந்த போதும் சரி தமிழ் கட்சிகள் வட-கிழக்கு இணைப்பு, சமஸ்டி என்றெல்லாம் கேட்பார்கள். பிறகு பார்த்தால் இரண்டாவது விடயமாக கல்முனை மாநகர பிரச்சினைக்கு தீர்வு தரவேண்டும் என்றும் கல்முனையை நீதியற்ற, நியாயமற்ற விதத்தில் துண்டாடவும் கேட்பார்கள். மரணித்த சம்பந்தன் ஐயா கடந்த ஜனாதிபதி வாக்கெடுப்பின் போது இதுவிடயமாக டலஸ் - சஜீத் அவர்களுடன் ஒப்பந்தம் செய்தார். இவர்களின் ஒப்பந்தம் என்னவென்று காலையில் பார்த்தால் கல்முனையை பலியிட ஒப்பந்தம் கையொப்பமிடபட்டிருந்தது.

இவைகளையெல்லாம் அவதானித்துக்கொண்டு இவ்வாறான சதிகளை முறியடிக்க பலவகைகளிலும் போராடிக் கொண்டு இருக்கிறோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நம் சமூகத்திற்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றார். எனவே எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் அவர் ஊடாக நாங்கள் யாருடன் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் வகையில் பேசப்போகின்றோமோ அவர்களுடன் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஒப்பந்தமாக எழுதி கைச்சாத்திட போகிறோம். அது 50-100 பக்கங்கள் கொண்ட ஒப்பந்தங்களாக இருந்தாலும் சரி அதனூடாக இலங்கை முஸ்லிங்களின் பிரச்சினைகளுக்க தீர்வை காணவேண்டும். - என்றார். (05)

# கல்முனை - மருதமுனை கடற்கரை வீதி அபிவிருத்தி சனியன்று தொடங்கியது





(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை தொடக்கம் மருதமுனை வரையிலான கடற்கரை வீதி காபட் வீதியாக புனரமைப்பு செய்யும் ஆரம்ப வேலைத்திட்டம் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் அருகில் சனிக்கிழமை நடைபெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதியின் விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் டி- 100 வேலைத்திட்டத்தினூடாக இவ் வீதி 125 மில்லியன் ரூபா நிதியில் இதன் முதற்கட்டமாக 65 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டவுள்ளது.

கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.கலீல் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் இசட்.ஏ. எம் அஸ்மீர்,வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம காரியாலய பொறியியலாளர் எம்.ஐ.எம் ரியாஸ்,கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஏ.ஜே ஜெளஸி,கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர்.அமீர்,எம்.ஐ.எம்பிர்தௌஸ்,ஏ.ஏ.பஸீர்,எம்.எஸ்.எம்.நவாஸ்,காரைதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.எம் ரனீஸ்,எம்.எச்.எம்.இஸ்மாயில் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா,நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்தியக்குழுவினர், வட்டார அமைப்பாளர்கள்,பள்ளிவாசல்களின்

நிர்வாகிகள்,பாடசாலைகளின் அதிபர்கள், வர்த்தகர்கள்,பொது மக்கள்,பிரதேச முக்கியஸ்தர்கள்,விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# கல்முனை மஹ்மூத் பாலிகாவில் இஸ்லாமிய புதுவருடதின நிகழ்வு





இஸ்லாமிய கலண்டரின் முதல் மாதமாக புனித முஹர்ரம் - 1446 புதுவருடத்தை நினைவு கூறும் வகையில் கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் சுற்று நிஷரூபத்துக்கு அமைவாக கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ‘மகிழ்ச்சிகரமான முஹர்ரம்’ எனும் தொனிப்பொருளில் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் முஹர்ரம் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஹர்ரம் நிகழ்வை ஞாபகப்படுத்தும் நல்லுபதேசங்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளை இஸ்லாம் பாட ஆசிரியர் மௌலவி ஏ.ஜி.முகம்மது நதீரால் நிகழ்த்தப்பட்டன. மேலும் இத்தினத்தில் எமது தாய் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பொருளாதார முன்னேற்றம், சுபீட்சம், ஐக்கியம், சௌபாக்கியம் வேண்டி விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றன.

இந்நிகழ்வை கல்லூரியில் தற்காலிக இணைப்பு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி சமதா மசூது லெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர்களான எம்.எஸ். மனுனா, என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# திரிசங்கு நிலையிலிருந்து மீண்டு வருவது அவசியம்

வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவிட்டோம் என்று அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் மீண்டும் மீண்டும் கூறிவந்தாலும் நாடு பொருளாதார ரீதியில் இயல்புநிலைக்கு இன்னும் திரும்பவில்லை என்பது வெளிப்படை. கடன்மறுசீரமைப்பு மற்றும் வரி அதிகரிப்பு ஆகியவற்றின் ஊடாக நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீள முடியும் என்றாலும், பொருட்கள் சேவைகளின் விலைகள் குறையாத வரைக்கும் மக்கள் பொருளாதார இயல்புநிலையை அனுபவிக்க முடியாது.

இப்படி பொருளாதார உறுதிப்பாடற்ற நிலை ஒருபுறம் என்றால் மறுபுறத்தில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலையும் தொடர்கின்றது. அரசுத் தலைவர் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு சொற்ப நாட்களே இருக்கும் நிலையிலும்அந்தத்தேர்தல்நடக்குமா இல்லையாஎன்பதே தெரியாத குழப்பமான ஒரு நிலையே தொடர்கின்றது. அரச தலைவர் தேர்தலை நிறுத்தக்கோரும் மனு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது. அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் மக்களின் ஆணை பெறப்படாத காரணத்தால் அந்தச் சட்டத்தின் கீழ் அரச தலைவரின் பதவிக் காலம் தொடர்பில் செய்யப்பட்ட திருத்தத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று மனுதாரர் கோருகின்றார். அது தொடர்பான தீர்ப்பு வரும்வரை தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்பதே கேள்விக்குறியாகி உள்ளது.

அதேநேரம் அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் அரசுத் தலைவர் தேர்தல் நடக்கும் என்றுகூறி அதற்குத் தயாராகிவருவதையும் காணக்கூடியாதாக இருக்கின்றது. ஆனாலும் தேர்தலை ஒத்திவைத்து அதிகாரத்தில் தொடர்வதற்கே அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சதி செய்கிறார்என்றுஎதிர்க்கட்சியினர்குற்றஞ்சாட்டுகின்றனர். வழக்குகளை மட்டும் சுட்டிக்காட்டி அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவில்லை. அரசமைப்பின் 83ஆம் பிரிவின் கீழ் அரசுத் தலைவரின் பதவிக் காலம் 6 ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைத் திருத்துவதற்கு ஆளும் தரப்பு எடுக்கும் முயற்சிகளையும் சுட்டிக்காட்டியே இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றன.

அரசமைப்பின்19ஆவதுதிருத்தம்மேற்கொள்ளப்பட்டபோது 83ஆம் பிரிவில் கைவைத்தால் அதற்கு மக்கள் ஆணை பெறப்படவேண்டும் என்ற காரணத்தாலேயே அது திருத்தப்படாமல்போனது. இப்போது அதனைத் திருத்துவது என்றால் மீண்டும் மக்களாணை பெறப்படுவது அவசியம். அப்படி மக்களாணை கோரப்படுமிடத்து, அது முடியும்வரையும் அரசுத் தலைவர் தேர்தலை நடத்துவது சாத்தியமல்ல. இத்தகைய நிலையில் அரசுத் தலைவர் தேர்தல்நடக்குமா இல்லையாஎன்கிறஅரசியல்தெளிவற்ற நிலையே தொடர்கின்றது.

பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தெளிவற்றதொரு நிலை தொடர்கையில் நாடு எப்படி முன்னேற்றப் பாதையில் பயணிக்க முடியும்? தெளிவானதும் தீர்க்கமானதுமான மக்களாணையைப் பெற்ற ஆளும் தரப்பும் அரசுத் தலைவரும் இருந்தால் மட்டுமே உறுதியான தீர்மானங்களை எடுத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். நித்திய கண்டம் பூரண ஆயுசு என்கிற கதையாக இன்னும் பல வருடங்களுக்கு ஆட்சியைக் கொண்டு நடத்துவது என்பது சாத்தியமுமல்ல, ஏற்புடையதுமல்ல.


எனவே, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகக் காணப்படும் இந்த நிச்சயமற்ற தன்மையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், மக்களாட்சி மாண்பைக் காக்கும் வகையில் அரசுத் தலைவர் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களையும் அடுத்தடுத்து நடத்தி உறுதியான தலைமைத்துவத்திடம் ஆட்சியைஒப்படைப்பதே சிறந்தது. திரிசங்கு நிலையிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதே அதன் முன்னேற்றத்திற்கு வழி.




# ஈரானின் புதிய அதிபர்: மேற்குலக உறவு சீர்படுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஈரான் மேற்கு நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்துவதை விரும்புவதாக புதிய அதிபர் மசூத் பெசெஷ்கியன் தெரிவித்துள்ளார். இதய அறுவைச் சிகிச்சை நிபுணரான ஆவார், ஈரான்-ஈராக் போரின் போது போராளியாகவும் மருத்துவராகவும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் சர்ச்சைக்குரிய ஹிஜாப் தலைக்கவச சட்டத்தை எளிதாக்க விரும்பும் சீர்திருத்தவாதி அவர்.

**மேற்கத்திய உறவில் சீர்திருத்தம்:**

ஈரானின் அதிபர் தேர்தலுக்கான இரண்டாம் கட்டத் தேர்தலில் கடும்போக்காளரான சயீத் ஜலிலியை 2.8 மில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து சீர்திருத்தவாதியான மசூத் பெசெஷ்கியன் (ஆயளழரன ௺நணநளாமயைெ) வெற்றி பெற்றுள்ளார்.

> **குர்திஷ் தாய்க்கு பிறந்த ஈரானின் புதிய அதிபர், ஈரானின் சிறுபான்மை இனக்குழுக்களின் விவகாரங்களில் நீண்ட காலம்கவனம் செலுத்தும் ஒருவர்**

அதிபர் தேர்தலில் போட்டியிட்ட 4 வேட்பாளர்களில் மசூத் பெசெஷ்கியன் மட்டுமே மிதவாதி என்று கூறப்படுகிறது. மேற்கத்திய நாடுகளோடு ஈரான் கடும் மோதல் போக்கைக் கொண்டுள்ள நிலையில், மேற்கத்திய நாடுகளோடு நட்புறவை ஏற்படுத்த விரும்புவதாக தேர்தலுக்கு முன் மசூத் பெசெஷ்கியன் தெரிவித்திருந்தார்.

69 வயதான புதிய ஜனாதிபதி மேற்கத்திய நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்துவதையும், கட்டாய முக்காடு சட்டத்தை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளார்.

மசூத் பெசெஷ்கியன் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் அதிகாரத்தை மதிக்கிறார். ஈரானின் ஆளும் தரப்பில் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்கவில்லை. அவர் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறார் எனவும் கூறப்படுகிறது.

மதவாத கடும்போக்காளர்களின் எதிர்ப்பு, இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் மற்றும் ஈரானின் அணுசக்தி திட்டம் போன்ற விடயங்களில் மேற்கத்திய கவலைகளை எவ்வாறு தீர்மானிப்பார் என்பதும் கேள்விக்குறியே ?

**குர்திஷ் தாய்**

மசூத் பெசெஷ்கியன் செப்டம்பர் 29, 1954 அன்று மேற்கு அஜர்பைஜானின் மஹாபாத்தில் ஒரு அஸேரி தந்தை மற்றும் குர்திஷ் தாய்க்கு பிறந்தவர். அவர் அஸெரி மொழியை பேசுகிறார். மற்றும் ஈரானின் சிறுபான்மை இனக்குழுக்களின் விவகாரங்களில் நீண்டகாலம் கவனம் செலுத்துகிறார். ஈரானின் புதிய அதிபர் ஒரு இதய அறுவை சிகிச்சை நிபுணராக, டாப்ரிஸ் மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் தலைவராக பணியாற்றியுள்ளார். அத்துடன் ஈரான்- ஈராக் போரின் போது (1980 - -1988) போர்வீரராகவும் மருத்துவராகவும் பணியாற்றி உள்ளார்.

**இதய அறுவை சிகிச்சை நிபுணர்:**

மசூத் பெசெஷ்கியன் தனது மனைவி பாத்திமா மஜித் (குயவநஅநா ஆயதனைஎ) மற்றும் அவரது மகள்களில் ஒருவரை 1994இல் ஒரு கார் விபத்தில் இழந்தார். அவர் மறுமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்து, தனது மற்ற இரண்டு மகன்கள் மற்றும் மகள்களைத் தனியாக வளர்த்தார்.

ஜனாதிபதி முகமது கடாமியின் நிர்வாகத்தின் கீழ் சுகாதாரம், சிகிச்சை மற்றும் மருத்துவக் கல்வி அமைச்சராக மசூத் பெசெஷ்கியன் பணியாற்றினார். அவர் ஈரானிய நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்ததுடன், தப்ரிஸ், அசார்ஷஹர் மற்றும் ஓஸ்குவை பிரதிநிதித்துவப்படுத்தி பல காலகட்டங்களில் 2016 முதல் 2020 வரை முதல் துணை சபாநாயகராகப் பணியாற்றினார்.

**பல சர்ச்சைகளில் சிக்கியவர்:**

2003இல் ஈரானிய- - கனடிய புகைப்பட பத்திரிக்கையாளர் ஸாரா கஸெமியின் (ஶுயாசய முயணநஅை) உடற்கூறாய்விலும் கலந்துகொண்டார்.

அவர் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, காவலில் இறந்தார். மண்டைக்குள் குருதிக் கசிவுதான் இறப்பிற்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார். ஆனால் சிராய்ப்பு அல்லது வெட்டுக்கள் எதுவும் இல்லை என்று கூறினார், அவரது இந்தக் கூற்று (5ஆம் பக்கம் பாரக்க..... )

காலைக்கதிர் Kalaikkathir

# காத்தான்குடி – புதுக்குடியிருப்பில் எரிபொருள் பவுஸர் கோர விபத்து

## தொலைபேசி சேவைகள் துண்டிப்பு



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை எரிபொருள் பவுஸர் வாகனம் மதிலொன்றில் மோதியதுடன், இதனால் ரெலிகொம் தொலைத்தொடர்பு வலையமைப்பின் தூண்களும் உடைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பிரதேசத்தில் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான எரிபொருள் பவுஸரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய எரிபொருள் பவுஸரின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

அத்தோடு, பவுஸர் மோதியதில் வீதியோரம் உள்ள தனியாருக்கு சொந்தமான வளாகமொன்றின் மதிலின் ஒரு பகுதியும், இலங்கை ரெலிகொம் தொலைத்தொடர்பு வலையமைப்பின் தூண்களும் உடைக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பிரதேசத்தில் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளில் காத்தான்குடி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(05)

# ஈரானின் புதிய அதிபர்.....

சர்வதேச கூக்குரல் மற்றும் விசாரணைக்கான கோரிக்கைகளுக்கு முரணானது. மசூத் பெசெஷ்கியன் பல சர்ச்சைகளில் சிக்கியுள்ளார். 2017ஆம் ஆண்டில், கட்டாய ஹிஜாப் கொள்கை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பே, 1978ஆம் ஆண்டில் பல்கலைலக்கழகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்குள் பெண்கள் ஹிஜாப் அணியாமல் தடை விதித்தவர்களில் முதன்மையானவர் என்றும் கூறப்படுகிறது.

2022ஆம் ஆண்டில், மஹ்சா அமினியின் இறப்பிற்குப் பிறகு, ஹிஜாப் அணியாததற்காக கைது செய்யப்பட்டு சிறையில் உயிரிழந்தார்.

அவளது சடலத்தை அவரது குடும்பத்திற்கு திருப்பி அனுப்புவது இஸ்லாமிய குடியரசில் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அவர் கூறியமை சர்ச்சையை உருவாக்கியது.

**அதிபர் தேர்தலில் வெற்றி:**

ஈரான் அதிபராக இருந்த இப்ராஹிம் ரெய்சியின் திடீர் மறைவை அடுத்து அந்நாட்டில் அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில், சீர்திருத்தங்களை ஆதரிப்பவருமான மசூத் பெசெஷ்கியன் வெற்றி பெற்றதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதன் மூலம், ஈரானின் அடுத்த அதிபராக மசூத் பெசெஷ்கியன் தேர்வானார் என்று உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

ஈரான் அதிபர் தேர்தலில் வாக்களிக்க 6.10 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்த நிலையில், அவர்களில் சுமார் 3 கோடி பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

50 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணித்தனர். பெறப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டதில், மசூத் பெசெஷ்கியன் 1கோடியே 63 லட்சம் வாக்குகளை (53.70௱) பெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்களில் முக்கியமானவரான சயீத் ஜலிலி ஒரு கோடியே 30 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார். இதையடுத்து, நாட்டின் அடுத்த அதிபராக மசூத் பெசெஷ்கியன் தேர்வாகி இருக்கிறார்.

தேர்தல் வெற்றியை அடுத்து அரசு தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய மசூத் பெசெஷ்கியன், “நாட்டின் மீதான அன்பு மற்றும் உதவும் எண்ணத்துடன் வாக்களித்த அனைவருக்கும் நன்றி. அனைவருக்கும் நட்பின் கரத்தை நாங்கள் நீட்டுவோம். நாம் அனைவரும் இந்நாட்டு மக்கள். அனைவரையும் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துவோம்” என்று தெரிவித்துள்ளார்.

மசூத் பெசெஷ்கியனின் வெற்றியை அடுத்து அவரது ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் தெஹ்ரான் மற்றும் பிற நகரங்களின் தெருக்களில் மசூத் பெசெஷ்கியனின் ஆதரவாளர்கள் நடனமாடியும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடி வருவதாக செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# போர் இடம்பெற்ற காலத்திலும் மூவின மக்களிடையே முரண்பாடுகளற்று வாழ்ந்த மக்கள் திருமலை மக்கள்

## இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் பெருமிதம்





(ஹஸ்பர் ஏ.எச்)

'அஸ்வெசும' நலன்புரி பயனாளி குடும்பங்கள் வலுவூட்டல் திட்டத்தின் கலந்துரையாடல் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் பங்குபற்றலுடன் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் சனிக்கிழமை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

எமது நாடு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடாகும். இருப்பினும் மூவின மக்களும் இணைந்து வாழக்கூடிய ஒரு மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் காணப்படுகின்றது. என்னதான் யுத்தம் காணப்பட்டாலும் மூவின மக்களிடையே எவ்விதமான முரண்பாடுகளும் பிரச்சினைகளும் இல்லாமல் வாழ்கின்ற மக்கள் என்பதை முதலில் கூறிக்கொள்கின்றேன் என பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

அஸ்வெசும பயனாளிகள் 27 லட்சம் பேர் இலங்கையில் தெரிவு செய்யப்பட்டாலும் எமது பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு 12 லட்சம் குடும்பங்களை சக்திபடுத்துகின்ற ஒரு பாரியளவு வேலைத்திட்டமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆகவே ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற இவ்வேலைத்திட்டத்தை தனியாக ஓர் அரசியல்வாதியாக நானோ அல்லது ஜனாதிபதியோ இணைந்து செயற்படுத்த முடியாது. 25000 இற்கும் மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றார்கள். 12 லட்சம் குடும்பங்களை சக்திப்படுத்துவதற்கு நாங்கள் மட்டும் போதாது, அரச உத்தியோகத்தர்களும் இணைந்தால் தான் இவ்வாறான அரச கொள்கைகள், திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆகவே சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு அரச உத்தியோகத்தர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்தால் மாத்திரமே 12 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களை சக்திப்படுத்த முடியும். ஆகவே இந்த சக்திப்படுத்தலுக்காக அனைவரும் தங்களுடைய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென மேலும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துக்கோரள, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், துறை சார்ந்த அதிகாரிகள், துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

### பெரமுனவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவால்களைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. நெருக்கடியான சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும்தரப்பைத்தோற்றுவித்தோம். எமது தீர்மானம் சிறந்தது என்பதை நாட்டு மக்கள் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல்தீர்மானமிக்கது. பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் எந்தஅரசியல்கட்சியாலும்தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் நன்றி கடன்பட்டுள்ளார்கள். ஆகவே, அரசியலில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றார்.

### தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குச் செல்வதற்கு இன்னமும் ஒருவாரமே உள்ளது. அப்படிப்பட்ட நிலையில்தான் தற்போது 19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட முறைமை தொடர்பில் சிலருக்கு நினைவு வந்துள்ளது. அதுமட்டுமன்றி ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில்சந்தேகங்கள்எழுகின்றன. இவற்றைப் பார்க்கின்றபோது வேடிக்கையாக உள்ளது.

எமதுகட்சியில்வேட்பாளர்களுக்க பஞ்சமில்லை. ஒரு வாரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முழுமையான அதிகாரம் சென்று அவர்கள் உத்தியோக பூர்வமாக தேர்தல்அறிவிப்புச்செய்தவுடன்நாம் போட்டியிடுவது பற்றிய அறிவிப்பை வெளியிடுவோம் என்றார்.

### சு.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை அறிவிப்போம்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு மீண்டுள்ளது. ஜனாதிபதித்தேர்தலுக்கானஅறிவிப்பு விடுக்கப்படவுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் தேர்தல் பரப்புரைகள் இடம்பெறுகின்றன. இதுவே ஜனநாயகம். இதனை வரவேற்கிறேன். ஆனால்2022ஆம் ஆண்டு இவ்வாறான ஜனநாயக சூழல் நாட்டில் காணப்படவில்லை.

ஆளும் தரப்பை பொறுப்பேற்க தயார் என்று தற்போது குரல் எழுப்புபவர்கள் 2022 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான நெருக்கடியை எதிர்க்கொண்டபோது ஆளும் தரப்பைப்பொறுப்பேற்கவில்லை.தனி மனிதனாக இருந்து ரணில் விக்கிரமசிங்க நாட்டையும், மக்களையும் பொறுப்பேற்றார். நெருக்கடியான சூழலில் நாங்கள் எமது எதிர்கால அரசியல் பற்றிச் சிந்திக்காமல்அவருக்குஒத்துழைப்பு வழங்கினோம். எமது தீர்மானம் இன்று வெற்றிப் பெற்றுள்ளது.

எவருக்கும் கடனில்லை, பயமில்லை என்று நாட்டை கடனாளியாக்கியவர்கள் அரசியல் மேடைகளில் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் 2022 ஆம் ஆண்டு எரிபொருள்நிரப்புநிலையத்துக்குகூட செல்ல முடியாமல் தலைமறைவாகி நாட்டைவிட்டுதப்பிஓடியதை மறந்து விட்டார்கள். யார் அச்சமடைந்து தப்பிச் சென்றது, யார் நாட்டை கடனாளியாக்கியது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

பலம்வாய்ந்த அரசியல் கட்சி என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். 2019ஆம் ஆண்டு அரசியல் அனுபவமற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கியதால் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்றன என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான நிலையில் இந்தக்

தொடர்ச்சி 9ம் பக்கம்....




காலைக்கதிர் Kalaikkathir

## சு.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி மீண்டும் அதே தவறை செய்ய முயற்சிக்கிறது.

தேசிய பட்டியல் உறுப்பினராக வியாபாரியை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் கடந்த 2 ஆண்டுகளாக வியாபாரம் செய்துக் கொண்டிருக்கிறார். இவ்வாறானவர்களினால் ஒருபோதும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. ஆகவே எமது அரசியல் தீர்மானத்தை இன்னும் இரு வாரங்களில் அறிவிப்போம் என்றார்.

## தீகவாபி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபம் மற்றும் அன்னதான மண்டபம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்து வைத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, கிழக்கு மாகாணத்தின் பௌத்த பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கீழ் தீகவாபி தாதுகோபுரம் மற்றும் முகது மகா விகாரையை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

'தீகவாபி அருண நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியத்தை நிறுவி நிதி சேகரிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர் தாதுகோபுரம் 62.3 அடி உயரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கியதோடு பக்தர்கள் வழங்கிய தாராளமான ஆதரவும் பாராட்டுக்குரியது - என்றார்.

## இரண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் கடினமான காலத்திலேயே நாட்டின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டேன். நான் தலைமைத்துவம் ஏற்று விடயங்கள் செயற்படுத்தப்படுவதற்கு தாமரை மொட்டுக் கட்சியினரும் ஒத்துழைப்புக்களை வழங்கினார்கள். அவர்களின் ஆதரவின்றி எனக்கு தனியாகச் செயற்பட்டிருக்க முடியாது.

தாமரை மொட்டுக் கட்சியானது பிளவுபட்டது. பெரும்பான்மையுடன் இருந்த கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. அதுமட்டுமன்றி ராஜபக்சக்களை நான் பாதுகாக்கின்றேன் என்று கூறுகின்றார்கள்.

ராஜபக்சக்களை பாதுகாக்க வேண்டிய எந்தத் தேவையும் எனக்குக் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன பெரமுனவும் இரண்டு வேறுவேறு கட்சிகள். நாட்டுக்காகவே ஒன்றிணைந்துள்ளன.

தற்போது நாம் வங்குரோத்து நிலைமையிலிருந்து மெல்லமெல்ல வெளிவருகின்றோம். மொத்த தேசிய உற்பத்தியானது 85 மில்லியன் டொலர்களாக உள்ளது. 2048ஆம் ஆண்டாகின்றபோது அதனை 350 பில்லியன் டொலர்களாக உயர்த்த வேண்டும்.

இந்த இலக்கை அடைய முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்புகின்றது. பொது ஜன பெரமுனவும் நம்புகின்றது. அந்த நம்பிக்கையைகூடாது என்று என்னால் கூற முடியுமா? தற்போது ஐக்கிய மக்கள் சக்தியே அதனை எதிர்த்து நிற்கின்றது.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டை பாதுகாக்கவேண்டும். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள்சக்தியும் என்னுடன் இணைந்துகொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுகின்றேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதி வேட்பாளர்களோடு நிபந்தனைகளுடன் பேசுங்கள்

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் அவர்களுடன் உங்களுடைய நிபந்தனைகளை முன்வைத்து பேச்சுகளை முன்னெடுங்கள் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடனான சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் தேர்தலில் நிறுத்தப்படவுள்ள தமிழ் பொதுவேட்பாளரை மையப்படுத்தி இனப்பிரச்சினைக்காள தீர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தமளிக்க வேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் கோரியுள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சியான புளொட்டின் தலைவர் சித்தார்த்தன் தவிர்க்க முடியாத காரணங்களால் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில், குறித்த சந்திப்பில் ஜனநாய கூட்டணியின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கோவிந்தன் கருணாகரம், வினோநோதராதலிங்கம், வேந்தன், சிவநேசன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் பொதுவேட்பாளர் இதன்போது சமகாலத்தில் நிகழ்கின்ற விடயங்கள் பற்றிய உயர்ஸ்தானிகரின் கேள்வியோடு கலந்துரையாடல் ஆரம்பமானது. அவ்வினாவுக்கு பதிலளித்த கூட்டணியின் அங்கத்தவர்கள்ஷரூபவ் தென்னிலங்கையின் வேட்பாளர்களால் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுகின்ற நிலைமைகளே காணப்படுகின்றன.

அந்த வகையில் நாம் இம்முறை தமிழ் மக்களின் சார்ப்பில் ஒரு வேட்பாளரை களமிறக்கப்போகின்றோம். மூன்று பேர் தென்னிலங்கையில் போட்டியிடுகின்றபோது, பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமான விடயமாகும்.

அதனை தென்னிலங்கையில் களமிறங்குவதற்கு தயாராகவுள்ள ரணில், சஜித், அநுர ஆகியோர் புரிந்துகொண்டுள்ளார்கள். அதன்காரணத்தினாலேயே அவர்கள் தற்போது வடக்குஷரூபவ்கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு விஜயங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆகவே அவர்களுக்கு தமிழ்த் தரப்பு நோக்கி தற்போது வருகை தரவேண்டிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றனர்.

மூவருடன் பேசுங்கள் அதன்போது, உயர்ஸ்தானிகர், தென்னிலங்கையில் மூன்று வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளதால் நீங்கள் (ஜ.த.தே.கூ) அவர்களுடன் உங்களது நிபந்தனைகளை முன்வைத்து பேசுகள் என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த கூட்டணியினர், அநுரகுமார இப்போது மாகாண சபைகள் பற்றிப் பேசினாலும் அவர்கள் மாகாண சபைக்கான அதிகாரங்கள் தொடர்பில் கூட தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக தெரியவில்லை. ஏலவே அவர்கள் தான் வடக்கு, கிழக்கு பிரிக்கப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளனர்.

ஆகவே அவர்களை ஆதரிப்பது முரணான நிலைப்பாடாகவே காணப்படும். அடுத்து சஜித் பிரேமதாச இதுவரையில் இனப்பிரச்சினைத் தீர்வு உட்பட தமிழ் மக்களின் விடயங்கள் சம்பந்தமாக கரிசனைகளைக் கொள்ளாதிருந்த நிலையில் தற்போது 13ஆவதுதிருத்தச்சட்டம் பற்றிக் கூறுகின்றார். அதுகூட காணிஷரூபவ்பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத வகையில் மாகாண சபை முறைமையை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கூட, 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் செல்வதற்கு தயாரில்லை. மறைந்த சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் உங்கள் முன்னிலையில் கூட அவர் காணி, பொலிஸ் அதிகாரங்கள் அற்ற மாகாண சபை முறைமை அமுலாக்கம் குறித்தே உரையாற்றியிருந்தார்.

ஆகவே மூன்று வேட்பாளர்களும் 13ஆவது திருத்தச்சட்டத்தினைக் கூட முழுமையாக முன்னெடுப்பதற்கு தயாரில்லாத நிலையில் தான் உள்ளார்கள். அவ்வாறான நிலையில் அவர்களுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதில் பயனில்லை. அதேநேரம், அவர்களும் தென்னிலங்கையில் தங்களது வாக்குவங்கி சரிந்துவிடும் என்பதற்காக பேச்சுகளை முன்னெடுப்பதற்கு தயாரில்லாத நிலைமையிலேயே உள்ளனர்.

மேலும், தென்னிலங்கைத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு செல்வதாக இருந்தர் மூன்றாம் தரப்பின் தலையீட்டுடன் தான் பங்கேற்பது பொருத்தமானது. ஆனால் அதற்குரிய நிலைமைகளும் பூரணமான அளவில் சாதகமாக இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியாவுக்கு சந்தர்ப்பம் அத்துடன், எம்மைப்பொறுத்தவரையில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவினால் மட்டுமே தலையீடுகளைச் செய்ய முடியும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். அவ்விதமான சூழலில் இந்தியாவும் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கத்திடம் தமிழர்களின் தீர்வு விடயத்தில் கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளபோதும் இலங்கை அரசாங்கம் நடைமுறையில் எதனையும் முன்னெடுத்ததாக இல்லை.

ஆகவே, தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்படுவதன் ஊடாக தமிழ் மக்களின் பிரதிபலிப்புக்களை மையப்படுத்தி இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக அழுத்தங்களை இந்தியாவினால் வழங்க முடியும். ஆகவே தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயமானது, இந்தியா, இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பமாகும் என்றும் கூட்டணியினர் குறிப்பிட்டனர்.

முதலீடுகள் மற்றும் இதர திட்டங்கள் இதனையடுத்து, இந்திய உயர்ஸ்தானிகர், வடக்கு, கிழக்கில் இந்தியா முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டார். விசேடமாக பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு, காங்கேசன்துறை துறைமுக ஆழப்படுத்தல் மற்றும் நிர்மாணங்கள், பருத்தித்துறை மீன்பிடி துறைமுக நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சம்பந்தமாகவும் வெளிப்படுத்தல்களைச் செய்திருந்தார்.

மேற்படி தகவல்களை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (05)

# ராணுவ மயமாக்கலை நியாயப்படுத்தும் ஒரு திட்டமே 'யுக்திய' நடவடிக்கையாம்

## கடுமையாகச் சாடுகிறார் அம்பிகா



நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக இராணுவமயமாக்கலை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், 'யுக்திய' நடவடிக்கையும் இராணுவயமயமாக்கலை நியாயப்படுத்துவதற்கான ஒரு திட்டமாகவே அமைந்திருப்பதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

திட்டமிடப்பட்ட இராணுவமய மாக்கல், 'யுக்திய' நடவடிக்கையின் கீழ் இடம்பெறும் சட்டவிரோத கைதுகள் போன்றவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து கருத்து வெளியிட்டுவரும் அம்பிகா சற்குணநாதன், இவ்விடயம் தொடர்பில் மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கையில், குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் இராணுவமயமாக்கலை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. புனர்வாழ்வளித்தல் பணியக சட்டம், ஶ்ரீலங்கா டெலிகொம் திருத்தச் சட்டமூலம், குடியகல்வு சட்டமூலம் போன்றவற்றை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும்.

அதேபோன்று போதைப்பொருளுக்கு எதிரான 'யுக்திய' நடவடிக்கையும் இராணுவமயமாக்கலுக்கு வாய்ப்பளிப்பதற்கும், அதனை நியாயப்படுத்துவதற்குமான ஒரு திட்டமாகவே அமைந்திருக்கிறது.

அதேவேளை போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டோர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மீண்டுமொரு தடவை விமர்சித்துள்ளார். அதுமாத்திரமன்றி, பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாதாள உலகக் குழுவினர் கொல்லப்பட வேண்டும் எனவும், அதனைச் செய்யும் பொலிஸாருக்கு நாமனைவரும் ஒன்றிணைந்து ஆதரவளிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன் மூலம் பொலிஸார் சட்டவிரோத படுகொலைகளில் ஈடுபடுகின்றனர் என்பதை அமைச்சர் ஏற்றுக்கொண்டிருப்பதுடன், அது தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் மிகப் பாரிய குற்றமாகும். ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பொலிஸார் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுடன், சட்டம் மீறப்படுவதற்கும் இடமளிக்கின்றனர்.

அரசாங்கம் தமது நடவடிக்கைகள் பாதுகாப்பானதும் அமைதியானதுமான இலங்கையை கட்டியெழுப்ப உதவும் எனக் கூறுகின்றது. ஆனால் அதற்கு முற்றிலும் எதிர்மாறான விடயங்களே நடைபெறுகின்றன. கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து பொலிஸாருடனான துப்பாக்கிச்சூட்டில் 5 பேரும், அடையாளம் தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டில் 19 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். இவை 'யுக்திய' நடவடிக்கை மற்றும் அதன்போது பின்பற்றப்படும் உத்திகளின் பின்னணியிலுள்ள உண்மையான நோக்கம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவரது அமைச்சர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்புக்கூறலுடன் செயற்படுவதற்குப் பதிலாக, அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கிறார். அதேபோன்று அமைச்சர்கள் வன்முறை செயற்பாடுகளுக்கு பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர்.

இருப்பினும் அது சட்டவாட்சியையும், உரிமைகளின் பாதுகாப்பையும் முற்றிலும் சீர்குலைப்பதாகவே அமையும் என எச்சரித்துள்ளார். (05)

# தமிழ் லெற்றர் அமைப்பால் 40 பேருக்குக் கௌரவம்

(எம்.எப்.நவாஸ்)

தமிழ் லெற்றர் ஊடக அமைப்பால் துறைசார்ந்த 40 பேருக்கு விருது வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் எம்.ரமிஸ் தலைமையில் அட்டாளைச்சேனை லெயிட்ஸ் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதற்கு பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. கலந்து சிறப்பித்ததோடு அவரும் நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரிக்கப்பட்டார்.

சிறந்த சமூகசேவை மற்றும் இனங்களிடையே அத்தோடு இனநல்லுறவுகளை தொடர்ந்தும் பேணிவரும் அம்பாறை மாவட்ட றுஹுணு லங்கா அமைப்பிற்கு சிறந்த சமூக சேவை அமைப்புக்கான விருதும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# இஸ்லாமிய புதுவருடம் தினத்தை முன்னிட்டு விஷேட நிகழ்வுகள்!




(பாறுக் ஷிஹான்)

இஸ்லாமிய புதுவருடம் தினத்தை(முஹர்ரம்) நினைவு தினத்தை முன்னிட்டு ஹிஜ்ரி 1446 முஹர்ரம் தொடர்பான விஷேட நிகழ்வு கல்முனை அஸ்-ஸ/ஹறா வித்தியாலய அதிபர் எம். எச். எஸ். ஆர். மஜீதிய்யா தலைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா(நழீமி) சிறப்புரை ஆற்றினார்.

மாணவர்கள் மத்தியில் ஆற்றப்பட்ட இச்சிறப்புரையில் புதிய மாற்றங்களுக்கு முஸ்லிம் சமூகம்' எவ்வாறு முகங்கொடுப்பது தொடர்பிலும்,முஹர்ரம் நிகழ்வின் சிறப்புக்கள், மாணவர்கள் பேணும் விழுமியங்கள், ஒற்றுமை,சமூக இணக்கப்பாடு உள்ளடங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.நிகழ்வின் இறுதியில் பாடசாலையின் ஆசிரியை சுசான் பாயிஸினால் வழங்கப்பட்ட இனிப்பும் பிரதம அதிதியால் சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி அதிபர் எம். ஏ. பாதிம் மிஸ்னா, ஆசிரியைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணி மேலும் இரு எலும்புக்கூடுகள், சையனைட் குப்பி மீட்பு







முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின் ஒன்பதாம் நாள் அகழ்வுப் பணிகள் சனிக்கிழமை இடம்பெற்றது.


இந்த அகழ்வுப் பணிகளின் நிறைவில் இரண்டு மனித எலும்புக் கூட்டுத்தொகுதிகளும், சையனைட் குப்பி ஒன்றும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

குறிப்பாக, முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தலைமையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர், தடயவியல் பொலிஸார் போன்றோரின் பங்குபற்றுதல்களுடன் இந்த ஒன்பதாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றன.

அகழ்வாய்வுப் பணிகளில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளிலிருந்து இவ்வாறு இரண்டு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், ஒரு சைனைட் குப்பியும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டுகட்ட அகழ்வாய்வுகளின் போது 40 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளில் இதுவரை 7 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளுடன் மொத்தம் 47 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## ஆத்துச்சேனையில் பள்ளிவாசல் திறப்பு விழாவும், கௌரவிப்பும்





(எச்.எம்.எம்.பர்ஸான்)

மட்டக்களப்பு மாவட்டம் - கிரான் பிரதேச செயலகப் பிரிவு, வாழைச்சேனை கமநல சேவைகள் நிலைய விவசாய எல்லைக்குப்பட்ட ஆத்துச்சேனையில் ஜாமிஉல் அக்பர் ஜு/ம்ஆப் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பள்ளிவாசல் தலைவர் எம்.எம். பாறூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிரான் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எம்.ஏ.ரசீத் கலந்துகொண்டு பள்ளிவாசலை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

பள்ளிவாசல் திறப்பு விழாவின் பின்னர் இடம்பெற்ற முதலாவது குத்பா பிரசங்கத்தை ரிதிதென்ன அபூபக்கர் சித்தீக் ஜு/ம்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி எம்.எல்.எம். பைஷரூஸ் நிகழ்தியதோடு, ஜு/ம்ஆத் தொழுகையை செம்மண்ணோடை பாரி ஜு/ம்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.எல்.எம்.முஹம்மட் நடத்தினார்.

காவத்தமுனைப் பகுதியைச் சேர்ந்த மரணமடைந்த மையன் போடியார் ஞாபகர்த்தமாக அவரது பிள்ளைகள் அன்பளிப்பு செய்த காணியில் குறித்த பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் கீழ்த்தளத்தை எம்.பி. இலவத்தம்பி ஹாஜியாரும், மேல் தளத்தை எம்.பி.புஹாரி ஹாஜியாருடன் இணைந்து நலன்விரும்பிகள் சிலரின் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, பள்ளிவாசல் உருவாக்கத்துக்கு பாரிய பங்காற்றியோர்களுக்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவித்தனர். (05)

## விளக்கேற்றி பூஜை செய்து புதையல் தோண்டமுற்பட்ட ஐவர் கைதாகினர்

### புத்தளத்தில் சம்பவம்



புத்தளம் - கருவலகஸ்வெள நெழும்கம்மான பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் விளக்கேற்றி பூஜை செய்து, புதையல் தோண்ட முற்பட்ட ஐந்து பேரை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

நெழும்கம்மான பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டுவதாக கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்கள் விளக்கேற்றி பூஜைசெய்த பின்னர், புதையல் எடுப்பதற்காக நிலத்தை தோண்டியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிக்கவெரட்டிய, வித்திக்குலிய மற்றும் நவகத்தேகம பகுதிகளைச் சேர்ந்த 5 நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி, அலவாங்கு, பூஜைக்கு பயன்படுத்திய விளக்கு, இரண்டு மோட்டார் சைக்கள்களும் கைப்பறப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை கருவலகஸ்வெள பொலிஸ் நிலையத்தில் திணைக்களத்தினர் ஒப்படைத்துள்ளனர். இந்நிலையில், மேலதிக விசாரணைகளில் கருவலகஸ்வெள பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

## மோட்டார் சைக்கிள் கேகாலையில் விபத்து

### ஒருவர் சாவு் ஒருவர் காயம்

கேகாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியில் ரங்வல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வறக்காப்பொலயிலிருந்து கேகாலை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றின் பின்புறத்தில் மோதி கவிழ்ந்து சறுக்கிச் சென்று எதிர்திசையில் பயணித்த லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரொருவரும் காயமடைந்துள்ள நிலையில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் கேகாலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# 1 லட்சத்து 16 ஆயிரம் மாணவருக்கு 2024இல் கல்விப் புலமைப் பரிசில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவின்படி, பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் 'ஜனாதிபதி புலமைப் பரிசில்' திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் 116,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

க.பொ.த. உயர்தரம் கற்கும் 6,000 மாணவர்களுக்கு மாதாந்தம் ஷரூபா 6,000 வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்துக்காக ஷரூபா 824 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று முதல் 11 வரையான 100,000 மாணவர்களுக்கு மாதாந்தம் ஷரூ.3,000 வீதம் 12 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கவிருப்பதோடு இதற்காக ஷரூ.3,600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரிவென மற்றும் பிக்கு கல்வி நிறுவனங்களில் சாதாரண தரம் கற்கும் மாணவருக்கான புலமைப் பரிசில் திட்டத்துக்காக ஷரூ.288 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பிரிவில் கற்கும் பிக்கு மாணவருக்கான புலமைப்பரிசில் திட்டத்துக்காக ஷரூ.720 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு பரிவர்த்தனை ஆணைக்குழுவும் ஜனாதிபதி நிதியமும் இணைந்து இந்த புலமைப் பரிசில்களை வழங்குகின்றன.

அதன்படி தற்போது செயற்படுத்தப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக இந்தத் திட்டத்தில் ஷரூ.5,000 மில்லியனுக்கும் அதிகமான தொகை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதன்படி, தற்பொழுது க.பொ.த உயர்தர மாணவர் மற்றும் தரம் ஒன்று முதல் 11 வரையான மாணவருக்காக இரு புலமைப்பரிசில் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

**புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் பற்றிய விவரங்கள் –**

கொழும்பு மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 242
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4,866
கம்பஹா மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 240
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 6,234
களுத்துறை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 180
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4,390
யாழ்ப்பாண மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 300
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 3,544
மன்னார் மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 120
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 1,030
வவுனியா மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 120
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 1,298
முல்லைத்தீவு மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 120
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 1,028
கிளிநொச்சி மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 120
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 956
குருணாகல் மாவட்டத்தின் 6 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 364
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 8,392
புத்தளம் மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 120
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4,046
மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 300
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 3,436
அம்பாறை மாவட்டத்தின் 7 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 420
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4,340
திருகோணமலை மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 300
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 2,972
பதுளை மாவட்டத்தின் 6 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 360
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 5,410
மொனராகலை மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 240
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 2,994
இரத்தினபுரி மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 240
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 5,642
கேகாலை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 180
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4524
கண்டி மாவட்டத்தின் 6 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 360
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 6,472
மாத்தளை மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 240
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 2,894
நுவரெலியா மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 300
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4,940
காலி மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 240
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 4,410
மாத்தறை மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 240
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 3,644
ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 180
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 3,330
அனுராதபுரம் மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 300
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 5,360
பொலன்னறுவை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,
க.பொ.த. உயர்தர மாணவர்கள் - 177
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் - 2,456
ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை மட்டத்தில் புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. புலமைப் பரிசில் குறித்த விபரங்களை வலயக் கல்வி அலுவலகங்களில் பெற முடியும்.

எனவே, இதுவரை புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்காத பாடசாலைகள் இருக்குமானால் விரைவாக விண்ணப்பிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது.

அதன்படி தற்போது நடைமுறையில் உள்ள மேற்படி இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக பிரிவென மற்றும் பிக்கு கல்வி நிலையங்களின் மாணவர்களுக்கு 5,000 புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது. (05)

# பஸ்ஸில் பயணித்த பெண்ணின் கூந்தலை வெட்டிய நபர் கைது

பஸ்ஸில் பயணித்த 27 வயதுடைய யுவதியின் கூந்தலை வெட்டியதாக கூறப்படும் முருத்தலாவ பிரதேச பள்ளி ஒன்றைச் சேர்ந்த மௌலவி என சந்தேகிக்கப்படும் ஒருவரை கண்டி தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ்ஸில் யுவதி அமர்ந்திருந்த போது சந்தேகநபர் அந்த ஆசனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து கூந்தலை வெட்டியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேநேரம் சம்பவத்தை எதிர்கொண்ட யுவதி, சந்தேகநபரையும், அவர் வெட்டிய கூந்தலையும் தனது கையடக்கத் தொலைபேசியில் காணொளியாகப் பதிவு செய்துள்ளார்.

மடவளை பிரதேசத்தில் வசிக்கும் இந்த யுவதி சில தேவைகளுக்காக கண்டி நோக்கி பயணித்த வேளையில் இந்தச் சம்பவத்தை எதிர்கொண்டுள்ளார்.

சம்பவத்தின் போது பஸ்ஸில் பயணித்த பயணிகள் சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் சந்தேகநபர் முருத்தலாவ தெஹியங்க வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். (05)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் பெண் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை சட்டவிரோதமாக கொண்டுவந்த பெண் ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் டுபாயில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பியபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் களனி பகுதியை சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர், நேற்று அதிகாலை 5.50 மணியளவில் அனைத்து சோதனைகளையும் முடித்துக்கொண்டு விமான நிலையத்தை விட்டு வெளியேற முற்பட்டபோதே கைதுசெய்யப்பட்டார்.

இவர் கொண்டு வந்த இரண்டு பயணப்பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 20,000 'மான்செஸ்டர்' சிகரெட்டுகள் அடங்கிய 100 சிகரெட் பெட்டிகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் எதிர்வரும் 17ஆம் திகதி சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார. (05)

# நோயாளிகளுக்கான இறுதிநிலை பராமரிப்பு செயற்பாடுகள் நிறுத்தம்

## மன்னாரில் நோயாளர்கள் அவதி





மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் மன்னார் மாவட்டத்தில் இறுதி நிலை நோயாளர்கள் என கூறப்படும் புற்று நோயாளர்கள் , சிறுநீரக நோயாளர்கள் மற்றும் படுக்கை நோயாளிகள் போன்றவர்களுக்கான மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு ஏற்படும் செலவுகளையும் அலைச்சல்களையும் குறைப்பதற்காக நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று முன்னெடுக்கப்பட்டு வந்த சிகிச்சை நடவடிக்கைகள் கடந்த பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன எனப் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் குடும்பத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். இறுதி நிலை நோயாளர்களாக இருப்பவர்களை வைத்தியசாலைகளில் வைத்து பராமரிக்க முடியாதவர்களும் கிளினிக் போன்ற செயற்பாடுகளுக்கு வாகனங்களில் அழைத்துச் செல்ல வசதிகளற்ற வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பாமர மக்களே இந்த சேவையை பெற்று வந்தார்கள்.

ஆனால் திடீரென இந்த சேவைகள் நிறுத்தப்பட்டதால் இறுதி நிலை நோயாளர்களும், நோயாளிகளின் குடும்பத்தினரும் மிகவும் சிரமப் படுவதுடன் பாரிய மன உளைச்சல்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இந்த இறுதி நிலை மருத்துவ சேவை நிறுத்தப்பட்டதால் விரும்பத்தகாத மரணமும் நிகழ்ந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறுதி நிலை நோய் பராமரிப்பில் மன்னார் மாவட்டம் முழுவதும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் உள்ளனர் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து மீண்டும் மன்னார் மாவட்டத்தில் இறுதிநிலை நோயாளர் பராமரிப்பை செயற்படுத்த முன் வருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பான வைத்தியர்கள் சிலரின் பெயர்களை குறிப்பிட்டு பொதுமக்கள் கடிதம் அனுப்பியுள்ளார்கள், விரைவாக மக்களுக்கான இறுதி பராமரிப்பு செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்குமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர். (05)

# வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் குடாநாட்டில் நாளை போராட்டம்

*வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.*

*வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கபில்டன் போல் இந்தப் போராட்டம் குறித்து தெரிவிக்கையில் –*

*இந்தப் போராட்டத்தின் நோக்கம் எமக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வது மாத்திரமன்றி, எதிர்கால இளைய தலைமுறைகளும் எம்மைப் போல் அவல நிலையை எதிர்கொள்ளாமல் இருக்கும் வகையிலான கல்வி சீர்திருத்தத்தை வலியுறுத்துவதையும் மையமாகக் கொண்டுள்ளது.*

*பட்டதாரிகளுக்கான வேலையில்லா பிரச்சினை என்பது பட்டதாரிகளை மாத்திரமல்ல, அவர்கள் சார்ந்த குடும்பங்களையும் சமூகத்தையும் வாழ்வாதார மற்றும் பொருளாதார ரீதியாக வெகுவாக பாதித்துள்ளதுடன், எதிர்கால தலைமுறைகளையும் முழு சமுதாயத்தையும் மிக மோசமாக பாதிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். எனவே, தற்போதைய தேர்தல் காலத்தில் எமக்கான பிரச்சினைகளை வெளிக்கொணர்வதன் மூலம் ஏதேனும் ஒரு வகையிலான சாதகமான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும். போராட்டங்கள் மூலம் மட்டுமே எங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பது எமது நாட்டை பொறுத்தவரை நிதர்சனமான உண்மை.*

*எனவே, இதை உணர்ந்து அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் ஒன்றிணைந்து தொழில் உரிமைக்கான ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு வலுசேர்க்கவும் எனத் தெரிவித்தார். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலை பிற்போட அரசு சதிசெய்கிறது

## எம்.ஏ.சுமந்திரன் குற்றச்சாட்டு

தேர்தலை பிற்போட அரசாங்கம் சதி செய்கிறது என தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும், கட்சி சம்மந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரும் ஒன்றாக கூடி அடுத்த தவணை 19 ஆம் திகதி வழக்கு வரவிருக்கின்ற காரணத்தால் அது குறித்து உரையாடப்பட்டது. நாங்கள் ஒவ்வொருவரும் தங்களது நிலைப்பாட்டுக்கு அமைய மறுமொழிகளை தாக்கல் செய்த பிறகு வழக்கை முடிவுறுத்துவதற்கான ஒரு யோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அந்த யோசனையின் விவரங்கள் நாங்கள் மத்திய செயற்குழுவில் கூடி தீர்மானிப்போம். ஆனால் பொதுவாக வழக்கை எந்த அடிப்படையில் முடிவுறுத்தலாம் என இணங்கப்பட்டிருக்கிறது. முன்னேற்றகரமான செயற்பாடு கலந்துரையாடலில் இடம்பெற்றது. 8 எதிராளிகளையும் 19 ஆம் திகதி வழக்கில் அழைப்பார்கள். கடைசியாக இடையீட்டு மனுவை முன்வைத்த ஜீவராஜா என்பவருடைய இடையீட்டு மனு தொடர்பான விடயமும் 19 ஆம் திகதி இருக்கிறது.

அதனால் வழக்கு தள்ளிப் போகக் கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆனால் அதை தவிர நாங்கள் அனைவரும் மறுமொழி அணைத்து, இப்பொழுது குடியியல் நடவடிக்கைகள் சட்டமூலத்தில் செய்யப்பட்ட திருததத்தின் அமைவாக வழக்கு விளக்கத்திற்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிபதியோடு ஒரு கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் தான் வழக்கை சுமுகமாக தீர்க்கக கூடிய வழிகள் என்ன என்பதை நீதிபதியோடு இணைந்து பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் சட்டப்படியாக இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளது. 19 ஆம் திகதி மறுமொழி வழங்கிய பின்னர் ஒரு திகதியை தீர்மானித்து கலந்துரையாடலை மேற்கொண்டு வழக்கை என்ன மாதிரி முடிவு றுத்தலாம் என்ற தீர்மானத்திற்கு வரலாம். அதற்கு முன்னர் மத்திய செயற்குழு கூடி எடுக்கப் போகும் தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடி இணக்கப்பாட்டை தெரிவிக்கும். அத்தோடு, வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதன் காரணத்தால் தமிழரசுக் கட்சி செயற்பட முடியாமல் இருகிறது. நீதிமன்றத்தில் முடங்கிக் கிடக்கிறது. கட்சியினுடைய சின்னத்தை பாவிக்க முடியாமல் இருக்கிறது. தேர்தல் வந்தால் என்ன செய்வார்கள். என்றெல்லாம் பலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்ற விடயம் நடந்து கொண்டிருகிறது. இதனை தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இதனை ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்துமாறும் என்னை பணித்தும் இருக்கிறார்கள். கட்சி முடக்கபட்படவில்லை. கட்சியினுடைய செயற்பாடுகள் எதுவும் முடங்கவில்லை. கட்சியின் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சி முழுமையாக செயற்பட்டுக் கொண்டே இருகிறது.

கட்சியின் சின்னத்தின் கீழ் எந்த தேர்தலையும் நாம் சந்திக்க முடியும். அதற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் கிடையாது. ஆகவே இதை தெரிந்துகொண்டே சிலர் வேணும் என்ற பிரசாரத்தை மேற்கொள்கிறார்கள். அதனால் தான் இந்த தெளிவுபடுத்தலை செய்கின்றோம். வழக்கில் நிறுத்தப்பட்டிருப்பது கட்சியின் தெரிவுகள். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெரிவுகள் நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனுடைய பிரதிபலன் என்னவென்றால் அதற்கு முன்னிருந்த தலைவர், செயலாளர், நிர்வாகிகள் கட்சியினுடையய செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. இலங்கை தமிழரசுக் கட்சி உயிர்ப்போடு இருப்பதுடன் ஓர் ஆக்கபூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கிறது.

எதிர்வரும் எந்த தேர்தலில் கட்சி போட்டியிடும். மக்களுக்கான தனது செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

நாடாளுமன்ற குழுதத் தலைவர் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை. அது தொடர்பில் எமது கட்சியின் அரசியல் குழு இணைய வழி ஊடாக ஒரு தடவை கலந்துரையாடியது. மத்திய செயற்குழுவில் அது சம்பந்தமான தீர்மானம் எடுப்போம்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மனுவை சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்யதுள்ளார். அது மூன்று நீதியரசர்கள் முன்பாக விசாரணைக்கு வருகிறது. ஏற்கனவே கடந்த திங்கள் கிழமையும் அப்படியான மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 5 நீதியரசர்கள் குழு முன்னிலையில் நடந்தது. அந்த வழக்கில் நானும் ஆஜராகினேன். அது அடிப்படையில்லாத மனு என்ன தெரிவித்து அதனை தாக்கல் செய்தவருக்கு ஒரு லட்சம் ஷரூபா வழக்கு செலவும் செலுத்தும் படி உத்தரவிடப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ள போது அதனை பற்றி பேசக்கூடாது. அரசாங்கம் தேர்தலை பிற்போட முனைப்பு காட்டுகிறது என்பதை அரசமைப்பில் 83 பி என்கின்ற உறுப்புரையை மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி கொடுத்ததில் இருந்தே தெரிகிறது. அதைப் பற்றி விளக்கமாகவும் விவரமாகவும் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன். தேவையில்லாத ஒரு திருத்தத்தை வேண்டுமென்றே கொண்டு வந்து மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி தேர்தலை பிற்போடுவதற்கான ஒரு சதி செய்யப்படுகிறது எனத் தெரிவித்தார். (05)

# அஷ்ரப்பாசறையில் வளர்ந்த நாங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான அநியாயங்களுக்குப் பயந்து ஓடிவிடமுடியாது!

## மு.கா. பிரதித்தலைவர் ஹரீஸ் உரை

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம்களின் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் எனும் சிங்கத்தின் ஆளுமைகளைக் கண்டு அவரின் பாசறையில் வளர்ந்த நாங்கள் இப்போது நடக்கின்ற சில்லறை அரசியலை பார்த்து, முஸ்லிம்களுக்கு எதிரான அநியாயங்களுக்கு பயந்து ஒடுங்குபவர்களாக இருக்க முடியாது. இருக்கவும் மாட்டோம். அப்படியான ஒரு வீர தலைவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கியது தலைவரின் குடும்பத்திற்கு சொத்து சேர்க்க வேண்டும் அல்லது தலைவரின் மகனை அமைச்சராக்க வேண்டும் என்று அல்ல.

அப்படியான கொள்கையில் அவர் வாழவும் இல்லை. இந்த மண்ணில் நாங்கள் அடிமைகளாக எங்களுடைய உயிர்களையும் சொத்துக்களையும் இழந்து, நிம்மதியாக வாழ்வதற்கான பயத்தில் இருந்த போது தான் ஒரு பாதுகாப்பு கேடயமாக முஸ்லிம் காங்கிரஸ் உருவாகியது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில் -

கடந்த காலங்களில் நாட்டின் நாலா பக்கங்களிலும் முஸ்லிம்கள் அடிக்கப்பட்டு, கொல்லப்பட்டுக் கொண்டிருந்த போது அப்போது இருந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஆளும் தரப்புக்கு ஆதரவாக ஆட்சியாளர்களின் பங்காளிகளாக மாறி மௌனமாக இருந்தபோது தலைவர் அஷ்ரப் மட்டும் சாதாரணமான சட்டத்தரணியாக இருந்து கொண்டே முஸ்லிம்களுக்காக உரிமைக் குரல் கொடுத்தார். அந்த நாட்களில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போது முஸ்லிம்களுக்காக தலைவர் அஷ்ரபின் அர்ப்பணிப்பு மிக்க போராட்டத்தையும், ஆளுமையையும் தலைவனுடைய அம்மன் கோயில் வீதிக்கு முன்பாக வசித்தவன் என்ற ரீதியில் அவருக்கு பக்கத்தில் இருந்து பார்த்துள்ளேன்.

அவருடைய எண்ணங்களையும், முஸ்லிம் சமூகம் நாட்டில் எவ்வாறு கௌரவமாக வாழ வேண்டும் என்பதையும் அவர் தெளிவாக முன்வைத்துள்ளார். நான் அவரை எட்டு - ஒன்பதாவது வயதிலிருந்து பார்த்து வளர்ந்திருக்கிறேன். அவரை நீங்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக பார்த்திருப்பீர்கள், ஓர் அமைச்சராக பார்த்திருப்பீர்கள், ஒரு தலைவராக பார்த்திருப்பீர்கள். ஆனால் நான் அவரை கண்டது ஒரு நல்ல நியாயவாதியாக. சமூக நீதிக்கு முதன்மையான மகன் ஓர் ஆள் இருப்பாரானால் இந்த நாட்டில் அது தலைவர் அஸ்ரப் தான். அம்பாறை மாவட்டத்தில் அவருடைய குடும்பம் ஒரு செல்வந்த, கல்வி கற்ற குடும்பம். காரியப்பர் குடும்பம் என்பது மிகவும் உயர்ந்த குடும்பமாக கௌரவமாக நோக்கப்பட்டவர்கள். அந்த குடும்பத்தில் ஒரு வாரிசாக அஷ்ரப் அவர்கள் இருந்தாலும் எளிய மக்களின் தோழனாகவே அவர் வாழ்ந்தார்.

தலைவர் அஷ்ரப் அவர்கள் நாடாளுமன்றம் நுழைவதற்கு முன்பே சமூகப் பிரச்சினைகளை கங்கணம் கட்டிக்கொண்டு தீர்வு கொடுத்தவர். துறைமுக அமைச்சராக இருந்த அவருக்கு கிட்டத்தட்ட துறைமுக நிலம் தலைவரின் சொந்த இடம் போலவே இருந்தது.

ஆனால் தலைவர் அஸ்ரப் அதை வைத்து மற்றவர்களிடம் பணம் கேட்கும் மனப்பான்மை கொண்டிருக்கவில்லை. 10 சதமேனும் தனக்காக பெறாத நமது தலைவரை பற்றி ஏனைய நாடுகளின் தொழிலதிபர்கள் பேசி கேட்டிருக்கிறோம். சுத்தமான பொதுநல அரசியலையே முன்னெடுத்தார். பல ஆயிரம் கோடி ஷரூபா பெறுமதியான துறைமுகத்தை உருவாக்கினார். பல தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்திருக்கிறார். இப்படியான தலைவரின் பாசறையில் பயின்ற நாங்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு எதை இழந்தேனும் தீர்வை பெற்றுக் கொடுப்போம். உரிமைகளை யாருக்கும் விட்டுக்கொடுக்க தலைவர் அஸ்ரப் எங்களை பயிற்றுவிக்க வில்லை. - என்றார். (05)

# அட்டாளைச்சேனையில் இரு மீனவர்களை மூன்று தினங்களாகக் காணவில்லையாம்





(எம்.ஏ.றமீஸ்)

கடந்த மூன்று தினங்களாக கடற்றொழிலுக்குச் சென்ற அட்டாளைச்சேனை பிரதேசத்தினைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் இதுவரை கரைக்கு திரும்பவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன இரு மீனவர்களும் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில், அட்டாளைச்சேனை கப்பலடி கடற்கரை பிரதேசத்திலிருந்து கடற்றொழிலுக்காக சென்றுள்ளனர்.

இவர்கள் மறுநாள் சனிக்கிழமை காலை வேளை கடற்பகுதியிலிருந்து கரைக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் மூன்று தினங்களாகியும் இதுவரை இம்மீனவர்கள் கரைசேராமையால் இவர்களை தேடும் பணி இரு தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அட்டாளைச்சேனை மற்றும் சின்னப்பாலமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரும் கடற்றொழிலை நீண்ட காலமாக மேற்கொண்டு வருபவர்கள் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

சின்னப்பாலமுனை-02 ஐச் சேர்ந்த ஐ.எல.இர்பான் என்னும் 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையும், அட்டாளைச்சேனை-06 ஆம் பிரிவைச் சேர்ந்த கே.ஆர்.எம்.நிஸ்பர் என்னும் 24 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பத்தவர் எனவும் இவ்வாறு காணாமல் போயுள்ள மீனவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு இரவுப் பொழுதில் கடலில் தரித்து நின்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு மறுநாள் காலை வேளையில் திரும்புகின்ற வழக்கத்தினை இவர்கள் கொண்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளையில் இம்மீனவர்கள் ஆழ்கடலில் இருந்தவாறு தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு உறவாடியதாகவும் அதன் பின்னர் இவர்களது தொலைபேசி அழைப்பு செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீனவர்கள் உரிய வேளைக்கு கரைசேராமல் இருந்த விடயத்தினை அறிந்த உறவினரும், நண்பர்களும் இவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாடு, பொலிஸார், கடற்படையினர், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் துறைசார் தரப்பினரிடமும் இவ்விடயம் தொடர்பில் அறியப்படுத்தி இம்மீனவர்களை தேடும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்மீனவர்கள் தமக்கான உணவு மற்றும் குடிநீர் போன்றவற்றை ஒரு நாளுக்கு மட்டும் கொண்டு சென்றதாகவும், இம்மீனவர்களைத் தேடும் முயற்சியில் தாம் ஈடுபட்டு வருவதோடு, கடற்படையினர் மற்றும் துறைசார் தரப்பினரின் உதவியினையும் தாம் நாடியுள்ளதாக சக மீனவர்களும், உறவினர்களும் தெரிவிக்கின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தீகவாபி தூபியில் நினைவுசின்னங்கள் பொக்கிஷங்களை வைக்கும் நிகழ்வு

## ஜனாதிபதியும் பங்கேற்பு!





(அபு அலா)

வரலாற்றுச் சிறப்புமிக்க தீகவாபி தூபிக்குள் புனித தாது, பொக்கிஷங்கள் என்பவற்றை வைக்கும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இலங்கையின் நான்காவது பெரிய தூபிகளில் ஒன்றான தீகவாபியை புனரமைக்கும் பணிகள் 2020 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்திற்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் தீகவாபி தூபியில் புனித தாது வைக்கப்பட்டதோடு அந்த சமயத்தில் விமானப் படையினர் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தினர்.

புனித தாது மற்றும் ஏனைய தாதுக்கள் வைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது மண்டபம் மற்றும் அன்னதான மண்டபம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்து வைத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, கிழக்கு மாகாணத்தின் பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கீழ் தீகவாபி தாது கோபுரம் மற்றும் முகுது மகா விகாரையை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.


'தீகவாபி அருண நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியத்தை நிறுவி நிதி சேகரிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர் தாது கோபுரம் 62.3 அடி உயரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கியதோடு பக்தர்கள் வழங்கிய தாராளமான ஆதரவும் பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், மல்வத்து தரப்பு வணக்கத்துக்குரிய அங்கும்புரே பிரேமவன்ஸ தேரர், கிழக்கு மாகாண பிரதி பிரதான சங்க நாயக்க தேரர், ரஜமகா விகாராதிபதி வணக்கத்துக்குரிய மகா ஓயா சோபித தேரர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் தயா கமகே, தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் பேராசிரியர் துசித மெண்டிஸ் மற்றும் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

(05)

# சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு நிகழ்ச்சி





மாணவர்களிடையே சமய அறிவையும் அதன் மூலம் ஒழுக்கநெறியையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்தப்படும் சமய அறிவுப்போட்டி இம் முறையும் நடைபெற்றுள்ளது. அதற்கான பரிசளிப்பு நிகழ்ச்சி அண்மையில் தீர்த்தோற்சவம் அன்று ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

தரம் 3 தொடக்கம் 11 வரை பயிலுகின்ற 215 மாணவர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள் இவர்களில் 152 பேர் பரிசுக்குரியவர்களாகக் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 3 பயிலும் செல்வி தீபிகா விஜே, 100 புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தப் பதக்கம் ஆண்டுதோறும் அமரர் சி. பொன்னுத்துரை, தாயார் அமரர் பொ.தங்கமாணிக்கம் ஆகியோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆலய பிரதமகுரு விக்னராஜா சர்மா அவர்களும், மஹோற்சவகுரு ஞானானந்தகுருக்கள் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். பரீட்சைக் குழு சார்பாக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் போ.ஐங்கரநேசன், ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் பாடசாலை அதிபர் யோ.ஜெக ஆனந்தம் பங்கேற்றிருந்தார்கள். (05)

# 4 மாதங்களில் ஆளும் தரப்பு மீதான மக்கள் ஆதரவு 3 மடங்கு அதிகரிப்பு

## வெரிட்டே ரிசேர்ச் தகவல்

நான்கு மாதங்களுக்கு முன்னர் இருந்ததை விட அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் ஆய்வினூடாக தகவல் தெரிவித்துள்ளது. குறிப்பாக, பொருளாதாரம் மற்றும் நாட்டின் பொருளாதாரப் போக்கு தொடர்பான விடயத்தில் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையை உணர்வதாகவும் இந்த ஆய்வினூடாக குறிப்பிடப்படுகிறது.

(05)

# தோட்டத் தொழிலாளர்கள் நானு ஓயாவில் ஆர்ப்பாட்டம்



(ப்ரி.கேதீஸ்)

தமக்கான நாள் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 1700 ரூபாவை வழங்குமாறு பெருந்தோட்டக் கம்பனிகளை வலியுறுத்தி தலவாக்கலை, நானுஓயா தோட்ட தொழிலாளர்கள் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வை வழங்க மறுக்கும் கம்பனிகள் தோட்டங்களை விட்டு வெளியேற வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்ட தொழிலாளர்கள் பதாதைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தாம் கடின உழைப்பை வழங்குகின்றபோதிலும் அதற்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும், இந்நிலைமை தொடரக்கூடாதெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

அதேவேளை சனிக்கிழமை தலவாக்கலை லோகி தோட்ட தொழிலாளர்களும் 1700 ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2024இல் வெளியிடப்பெற்றது